# பொருளிலக்கண வளர்ச்சியில் தொன்னூல் விளக்கமும் அறுவகை இலக்கணமும்

112

மு. அரவிந்
தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி)
சென்னை 600005
aravind.yuvan001@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் தோன்றிய இலக்கணிகளான தொன்னூல் விளக்கமும் அறுவகை இலக்கணமும் தமிழிலக்கண வளர்ச்சியோடு சேர்த்து எண்ணத்தக்கவை. தமிழுக்கே உரிய சிறப்புக் கூறாகக் கருதப்பெறும் பொருளிலக்கண வளர்ச்சிப் பார்வையில் இவ்விரு நூல்களையும் வைத்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம். அகப்பொருள் இலக்கணமும் புறப்பொருள் இலக்கணமும் இந்நூல்களில் அமையும் பாங்கு குறித்தும் அவற்றின் சமூகப் பண்பாட்டு அரசியல் பின்னணிக் குறித்தும் இவ்வாய்வு விளக்க முற்படுகிறது.

முதன்மைச் சொற்கள்: அகம் - புறம், சிற்றிலக்கியம், சமயம், ஐந்திலக்கணம், துறவி.

**முன்னுரை**

தமிழில் இலக்கண நூல்கள் காலந்தோறும் எழுதப்பட்டிருக்கின்றன. இலக்கண உருவாக்கமானது ஒவ்வொரு காலகட்ட சமூக, அரசியல், கல்வி மற்றும் மொழி மாற்றங்கள் சார்ந்த அழுத்தங்களின் வெளிப்பாடு ஆகும். இலக்கணத்தை எழுதுவதற்கு ஒவ்வொரு இலக்கணக் கலைஞனுக்கும் வலுவான காரணங்களும் சமூகப் பொறுப்புகளும் உள்ளன. இத்தகைய சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியில் எழும் இலக்கணத்தை நூல் என்பதைத் தாண்டி பன்முக நோக்கில் அணுகப்பட வேண்டும். அதன் எல்லா பரிணாமங்களும் காலந்தோறும் ஆய்வின் கவனத்திற்கு உரியன. அந்த வகையில் தொன்னூல் விளக்கத்தையும் அறுவகை இலக்கணத்தையும் இக்கட்டுரை ஆய்கிறது.

**தொல்காப்பியத்திற்குப் பிந்தைய வளர்ச்சி**

தமிழில் கிடைக்கும் முதல் இலக்கண நூல் என்ற அடிப்படையில், தமிழிலக்கண வளர்ச்சியைத் தொல்காப்பியத்தைக் கொண்டே மதிப்பிடுகிறோம். தொல்காப்பியப் பொருளதிகாரமே பொருளிலக்கணத்தின் தொடக்கமாக உள்ளது. தொல்காப்பியத்திற்குப் பின் அகப்பொருள், புறப்பொருள் குறித்துத் தனிநூல் எழுதும் மரபு தோன்றியது (பாலசுப்பிரமணியன், 2018: 69). கிடைக்கப்பெறும் தரவுகள் அடிப்படையில் அவ்வாறு இயற்றப்பெற்ற முதல் நூல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இறையனார் களவியல் ஆகும். இந்நூல் அகப்பொருள் பற்றிப் பேசுவதாகும்.

அகப்பொருள், புறப்பொருள் என்பதைத் தாண்டி யாப்பு, பாட்டியல் பற்றிப் பேசும் நூல்களும் தோன்றின. இம்மரபு பத்தாம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. பதினொன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு இம்மரபானது ஐந்திலக்கணம் பேசுவதாகவும், எழுத்து, சொல் இலக்கணங்கள் பேசுவதாகவும் அணி இலக்கணம் பேசுவதாகவும் மாற்றமடைந்தது.

“பிற்கால இலக்கண ஆசிரியர்களிற் சிலர் எழுத்து, சொல்லோடு நின்று விட்டனர். மூன்றாவதான பொருளையும் எழுதியவர்கள் கூட, முன்னைய தொல்காப்பியக் கருத்துகளைத் திரும்பவும் சுருக்கமாகக் கூற



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

முயன்றனரே தவிரப் புதுமை படைக்கவோ, முன்னதை மேலும் விளக்கவோ முயன்றிலர். பொருள் இலக்கணத்திலிருந்து பலர் யாப்பைப் பிரித்துத் தனி இலக்கண நூல்களை எழுதினர்; சிலர் அகம், புறம் பற்றித் தனி இலக்கண நூல்களை எழுதினர்; மற்றும் சிலர் பாட்டியல் நூல் எனவும் ஒரு பிரிவைக் கலப்படமாக ஆக்கினர். ஆனால் அணி இலக்கணத்தைத் தனியே பிரித்து ஒரு நூல் கூடத் தோன்றவில்லை. தண்டியின் அணி வடமொழிப்பெயர் கொண்டிருப்பதே, அது பொருளின் வழிப்பட்ட பிரிவன்று என்பதைக் காட்டும்" (தமிழண்ணல், 2014: 13) என்று பிற்கால இலக்கணங்களை விமர்சிக்கிறார் தமிழண்ணல்.

**வீரமாமுனிவரும் தண்டபாணி சுவாமிகளும்**

இத்தகைய இலக்கண வளர்ச்சிப் பின்னணியில் தோன்றியவையே தொன்னூல் விளக்கமும் அறுவகை இலக்கணமும். வீரமாமுனிவரால் பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது தொன்னூல் விளக்கம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தண்டபாணி சுவாமிகளால் எழுதப்பட்டது அறுவகை இலக்கணம். இரண்டுமே ஐந்திலக்கணம் பேசுபவை. இனி இவ்விரு நூல்களையும் தனித்தனியே மதிப்பிடலாம்.

**தொன்னூல் விளக்கம்**

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்தின் பொருளதிகாரத்தை அகம், புறம் என்னும் மரபைப் பின்பற்றி அமைக்கவில்லை. இந்நூலைப் பதிப்பித்த ச.வே. சுப்பிரமணியன் வீரமாமுனிவர் பொருளதிகாரத்தைப் பார்க்கின்ற நோக்கமே புதிதாக அமைந்துள்ளது என்று தனது முன்னுரையில் கூறுகிறார் (சுப்பிரமணியன், 1978: 32).

"அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு இவற்றுட் பொருணூற்றந்த செந்தமிழுணர்ந்தோர் மற்றை யாவுமொழிய அகப்பொருளைச் சிற்றின்ப மொன்றையும் புறப்பொரு ளெனப் படைச் சேவகமொன்றையும் விரித்துரைத்தார். அங்ஙனம் பொதுப்படாதுரைத்த நூல் சிறுபான்மை யாகையான் இங்ஙனம் அறமுதனான்கிற்கேற்பப் பொது நூலாக இவ்வதிகார முடியுமெனவே கொள்க" (சுப்பிரமணியன், 1978: 32) என்று வீரமாமுனிவர் தனது நூலுரையில் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.

தொன்னூல் விளக்கத்தில் அகத்திணையாவன பன்னிரண்டு என்றும், அவையாவன இயல்பு, வகை, பொது, சிறப்பு, உவமை, புறநிலை, எதிர்நிலை, கருவி, காரியம், காரகம், முன்னவை, பின்னவை என்றும் கூறுகிறார் வீரமாமுனிவர். அகம், என்பது மனநிகழ்ச்சி என்றும் இத்தகு உணர்ச்சிகள் புறநிலையில் சான்றுகாட்டி விளக்கப்படலே புறத்திணை எனவும் இவர் கூறுதல் புதுமையாக உள்ளது.

புறப்பொருளாவன ஒழுக்கம், வழக்கு, தண்டம் எனக் கூறும் இவர் மரபுவழி வரும் ஏழ் புறத்திணைப் பகுப்பை ஒரேயொரு நூற்பாவில் கூறிச் செல்கிறார். அந்நூற்பாவில்இ

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி யுழிஞை தும்பையேழ் புறத்திணை (தொ.வி. 199: 6-7)

என்று திணைகளைப் பகுத்துள்ளார். இத்திணைப் பகுப்பில் ஏழு திணைகள் வகுக்கப்பெற்றாலும், இப்பகுப்பு தொல்காப்பியத்தைப் பின்பற்றியதல்ல. கரந்தை, நொச்சி ஆகிய திணைகள் கூறப்பெற்றிருந்தாலும், இது புறப்பொருள் வெண்பாமாலையையும் பின்பற்றியதல்ல. இரண்டு நூல்களை உற்றுநோக்கி, இரண்டிலும் மாறுபட்டு தனக்கே உரிய தனி முறையில் திணைகளை அமைத்துள்ளார் வீரமாமுனிவர். இதில் வாகை, பாடாண் ஆகிய திணைகளை அவர் தவிர்த்ததன் காரணம் விளங்கவில்லை.

பகைநிரை ஒட்டல் தன்நிரை மீட்டல்
பகைமேல் செல்லல் பகைக்கு எதிரூன்றல்


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

தன்எயில் காத்தல் பகைஎயில் கொள்ளல்
போர்வெல்லல் எனமுறை புறப்பொருள் திணையே (தொ.வி. 199: 8-11)

என்று ஒவ்வொரு திணைக்கும் உரிய பொருண்மையைக் குறிப்பிடுகிறார். இதில் காஞ்சித் திணைகுரியதாக 'பகைக்கு எதிரூன்றல்' என்பதைக் கூறுகிறார். எனவே இதன் திணை விளக்கம் புறப்பொருள் வெண்பாமாலையைப் பின்பற்றியுள்ளது எனத் தெரிகிறது. மற்றபடி இதில் துறைகள் எதுவும் இடம்பெறவில்லை.

**அறுவகை இலக்கணம்**

ஐவகை இலக்கணத்தோடு புலமை இலக்கணத்தையும் சேர்த்து அறுவகை இலக்கணம் கூறுவதாக அமைத்துள்ளார் தண்டபாணி சுவாமிகள். இவர் பொருளதிகாரத்தை அகப்பொருள், புறப்பொருள், அகப்புறப்பொருள் என மூவகையாகப் பாகுபாடு செய்கிறார். புறப்பொருள் பிரிவில் இவர் ஐவகை நிலத்தியல்பு கூறுவது தொல்காப்பிய மரபோடு மாறுபடுவதாக உள்ளது.

நிலமும் பொழுதும் முதலென வகுத்து, அகத்திணையின்கண் சுட்டும் பண்டை நெறி முற்றிலும் மாறிவிட்டதை இந்நூல் காட்டுகிறது. நால்வேறு வருணத்தவரின் உறைவிடங்களைப் புறப்பொருளில் இவர் கூறுகின்றார். போர்க்களம் குறித்தச் செய்திகளை ஒரே ஒரு நூற்பாவில் இவர் குறிப்பிடுகின்றார்.

கழுகொடு பருந்தும் காக்கையும் படர்தலும்
வென்றியும் தோல்வியும் வேறுபல இயல்பும்இ
பொருகளச் சீரெனப் புகன்றனர் புலவோர் (அ.இ.பொருளிலக்கணம், 76: 5-7)

மேற்கூறிய நூற்பாவானது பரணி நூல்கள் களக்காட்சியைப் புனைவது போல உள்ளதன்றி போர்க்குரிய திணை நெறிகளைக் கூறுவதாக இல்லை. தண்டபாணி சுவாமிகள் இதே நூலின் மற்றொரு பகுதியில்இ

பிறவா வீடே பெறமுயன் றிருப்பார்க்கு
உடம்பும் புறமென உரைத்தனர் உயர்ந்தோர் (அ.இ.பொருளிலக்கணம், 110)

என்றுரைப்பதிலிருந்து, சமயவுணர்வு பெருகிய கால நிலையில், அகப்பொருள் புறப்பொருள்களுக்குரிய இலக்கணமும் மாறி விட்டமை அறியமுடிகிறது.

**காலமும் சூழலும்**

தொன்னூல் விளக்கமும் அறுவகை இலக்கணமும் ஏறக்குறைய ஒத்தக் காலத்தைச் சேர்ந்தவை. முன்னது பதினெட்டாம் நூற்றாண்டிலும் பின்னது பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் வெளிவந்தன. இந்தக் காலக்கட்டமானது தமிழ்ச் சமூகத்தில் இறையுணர்வு மேலோங்கிய காலமாகும். பக்தி இயக்கத்திற்குப்பின் சமயங்கள் வேரூன்றியிருந்தன. வழிபாட்டு முறைகள் இறுக்கமானச் சூழலுக்குள் சென்றிருந்தன. மேலும் கிறித்தவச் சமயமும் இதே காலக்கட்டத்தில்தான் தனது பரப்பல் பயணத்தை வீரியமாகத் தொடங்கியது. அடுத்ததாக இவ்விரு நூலாசிரியர்களின் பின்புலத்தைக் காணும்போது இருவருமே துறவிகள் எனத் தெரிகிறது. வீரமாமுனிவர் கிறித்தவச் சமயத் துறவி. தண்டபாணி சுவாமிகள் சைவ சமையத் துறவி.

**இலக்கண உருவாக்கத்தின் பின்னணி**

ஒரு மொழியிலுள்ள நூல்கள் அவ்வக்காலத்திற்கேற்ப மாறுபடுகின்றன. ஒரு நூல் தோன்றுங்காலத்தில் எவை எவை நாகரிகமாகவும், அறிஞர்களின் செயல்களாகவும், வியக்கத்தக்க செய்திகளாகவும் கருதப்பெற்றனவோ, அவைதாம் அக்காலத்தில் தோன்றும் நூல்களிலும் பிரதிபலிக்கும் (சுப்பு ரெட்டியார், 2010: 35).

காலத்திற்கேற்ற முறையில், தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கைமுறையும் மாறி மாறி வந்திருக்க வேண்டும் என்கிறார் ஆ. வேலுப்பிள்ளை (வேலுப்பிள்ளை, 2016: 3-4). இவர் மக்கள் வாழ்வியலின் பிரதிபலிப்பு இலக்கியம் என்ற அடிப்படையில் வாழ்க்கைமுறை மாற்றத்தோடு இலக்கண இலக்கிய வளர்ச்சியை ஒப்பிட்டுப் பேசுகிறார்.

“மொழி உயிரி, மாறுவது, வளர்வது. இலக்கணமும் உயிரி. நிலையான பகுதியொன்றிருப்பினும் பழையன கழிந்து புதியன புகுந்து மாற்றமும் வளர்ச்சியும் கொள்கின்றது. இதன் காரணமாகத்தான் போலும் ஒரு மொழிக்குப் பல இலக்கண நூல்கள் காலப்போக்கில் எழுகின்றன” (அன்னி தாமசு, 2018: 11) என்கிறார் அன்னி தாமசு.

ஒரு குறிப்பிட்ட கால நீட்சியில் இலக்கணப் பிரதியினுள் அடங்கிக் கிடக்கும் அதனைப் பற்றிய புரிதல்களை இலக்கண மரபு எனக் கூறலாம். இக்கால நீட்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழும்போது மற்றொரு மாறுபட்ட மரபின் தோற்றம் நிகழ்கிறது. இவ்வாறு இலக்கிய மரபு என்பது காலந்தோறும் மாறும் தன்மையுடையது என்பதை விளங்கிக்கொள்வது இன்றியமையாதது.

வாய்மொழி மரபிலிருந்து எழுத்து மரபாக மாறியதிலிருந்து இன்றுவரை புதிய புதிய இலக்கண நூல்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. புதிய புதிய வடிவில், புதிய உள்ளடக்கங்களோடு, முன்னதைத் தொடர்ந்தும், அதிலிருந்து மாறுபட்டும் இது தொடர்ந்து வருகிறது. சீரான இடைவெளியில் ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த இலக்கண மரபு மாறிக்கொண்டே வருகிறது.

இலக்கண உருவாக்கத்தில் இலக்கணக் கலைஞனின் சமூக உணர்வும் மொழியுணர்வும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை இலக்கணக் கலைஞன் வாழ்ந்த காலத்தோடு தொடர்புடைய உணர்வுநிலை வெளிப்பாடுகள். படைப்பும் பயனாக்கமும் பயனாளியும் ஒரு நேர்க்கோட்டில் இணைவது இலக்கணக் கலைஞனின் இவ்வுணர்வுகளால் ஆகும். காலத்தால் இவ்வுணர்வு நிலைகள் மாறுபடும்போது புதிய படைப்பின் தேவையும், புதிய பயன்பாடும் வலியுறுத்தப்படுகின்றன. இவ்வாறு காலத்தின் தேவைகளை அடியொற்றியே பல்வேறு இலக்கணங்கள் பல காலகட்டங்களில் தோன்றியுள்ளன என்பதைப் பொருத்திப் பார்க்க வேண்டும் (இராசாராம், 2019: 193).

**முடிவுரை**

மேற்கண்ட செய்திகளின்வழி காலம், நூலாசிரியர் ஆகிய இரண்டு கூறுகள் முதன்மைப் பெறுகின்றன. நூலாசிரியர்கள் இருவரும் துறவிகள் என்பதால் அவர்கள் அகப்பொருள் பற்றிப் பேசாமல் தவிர்த்தனர் என்று கொள்ள முடிகிறது. இவை சிற்றிலக்கிய வளர்ச்சிக்குப் பிந்தைய இலக்கணிகள் ஆகையால், புறப்பொருள் குறித்து விளக்கும் இடங்களில் அவற்றின் செல்வாக்கு தென்படுகின்றன. கிறித்தவமும் சைவமும் அகம் மற்றும் புறத்தை விளக்கும் நிலையில் குறிப்பிடத்தகுந்த காரணிகளாக இருந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. முற்றிலும் சமய அடிப்படையிலான சமூகமாக மாறிவிட்டச் சூழலில் அதன் சமூகப் பிரதிபலிப்பு இவ்விரு நூல்களிலும் வெளிப்படுகிறது. இலக்கண உருவாக்கத்தின் இந்த மாற்றம் சமூகப் பண்பாட்டு அரசியல் சூழலோடு அணுகப்பட வேண்டியது.

**துணை நூல்கள்**

☐ அன்னி தாமசு, 2018, இலக்கணவியல், அமுத நிலையம், சென்னை.

☐ இராசாராம், சு., 2019, இலக்கணவியல்: மீக்கோட்பாடும் கோட்பாடுகளும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

☐ சுப்பிரமணியன், ச.வே. (ப.ஆ.), 1978, தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

☐ சுப்பு ரெட்டியார், ந., 2010, தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

☐ தண்டபாணி சுவாமிகள் (மூ.ஆ.), 1978, அறுவகை இலக்கணம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, திருப்பேரூர்.

☐ தமிழண்ணல், 2014, சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

☐ பாலசுப்பிரமணியன், கு.வெ., 2018, சங்க இலக்கியத்தில் புறப்பொருள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

☐ வேலுப்பிள்ளை, ஆ., 2016, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.